Proceeding of the Commissioner of Thoothukudi City Municipal Corporation

PRESENT : V.P.JEYASEELAN, I.A.S.

D.Dis No . 4669/2018 /F 1- WZ                                                  Dated:18 .06.2019

**Sub** : layout - Thoothukudi Corporation - West Zone - Layout Approval Town Survey Ward C Block 32 Town Survey No. 2/1 - Thoothukudi Corporation Layout Approved – Regarding.

**Ref** : Approved Layout ம.வ/தூ.உ.தி.கு. எண்.02/2019 Dated : 26.03.2019.

**********

**ORDER**

Permission is hereby granted to layout Tow Survey ward C, Block. 32 . Town Survey No. 2/1 into 66 Plots subject to this following Condition. The approved plans are sent herewith.

**CONDITIONS :**

1 . Approved LP/ DTCP No. ம.வ/தூ.உ.தி.கு. எண்.02/2019

2 . Note: (a) this permit is furnished by / virtue / of by under Sec. (3) of section 9 - C of Tamil Nadu Town and country planning Act 1971 ( Act 49 of 1972 )

3 . (b) According to section 79 of the T & C P ( Act 35 of 1972 ) as amended by Act 22 of 1974 any person aggrieved by any decision or under of the planning authority under section 49 of sub section (1) section 54 may appeal to the government with two months from the date on which the decision or order was communicated.

4. (c) The Member Secretary, LPA Thoothukudi. The Commissioner, Thoothukudi Corporation reserves the right to revoke or modify the planning permission and laypur approval in the event of planning permit and approved layout having been granted based either or wrong information furnished by the applicant or by misrepresentation of the facts or by any lapse or procedural formalities to be followed or permit having been obtained by any fradulent manner

The layout plot should be in accordance with the approved plan.

Encl: Approved Plan & Layout Conditions.

For Commissioner & Special Officer
Thoothukudi Corporation

18/06/19

To. Thiru: G.Vetrivel
106, Palai Road . Thoothukudi

Received 18/6/19

நகர் ஊரமைப்புத் துறை

அனுப்புநர்
திரு.R.S.மாரியப்பன், பி.இ, எம்.பி.ஏ.,
உறுப்பினர் செயலர் (பொ),
உள்ளூர் திட்டக்குழுமம்,
51, மேலரதவீதி,
தூத்துக்குடி-2.
**ms.thoothukudilpa@tn.gov.in**

பெறுநர்
ஆணையர்,
தூத்துக்குடி மாநகராட்சி,
தூத்துக்குடி.

ந.க.எண். 1547/2018 தூஉதிகு    நாள். 26 .03. 2019

அய்யா,

**பொருள்:** மனைப்பிரிவு – தூத்துக்குடி உள்ளூர் திட்டப் பகுதி - தூத்துக்குடி மாநகராட்சி, ஒப்புதலளிக்கப்பட்ட அண்ணா விரிவு அபிவிருத்தி திட்டம் - வார்டு-சி, பிளாக்-32, நகரளவை எண்.2/1-ல் 3.27 ஏக்கர் (13235.0 ச.மீ) ல் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்கு 1971 ம் ஆண்டு நகர் ஊரமைப்புச் சட்டம் பிரிவு 49-ன் கீழ் தொழில்நுட்ப ஒப்புதல் மற்றும் திட்ட அனுமதி அளிக்கப்படுகிறது.

**பார்வை:**
1. மனுதாரர் திரு.G.வெற்றிவேல் விண்ணப்பம் நாள்.21.08.18 மற்றும் 22.03.19
2. அரசாணை 2டி எண்.110, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (ந.வ4(1)) துறை நாள்.05.07.2018
3. தமிழ்நாடு அரசிதழ் எண்.39, பாகம் VI, பிரிவு-1, நாள்.26.09.2018
4. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை கடிதம் ந.க.எண்.2178/2017/டிபி1, நாள்.23.10.18
5. தூத்துக்குடி உள்ளூர் திட்டக் குழும தீர்மானம் எண்.10, நாள்.30.10.2018
6. ஆணையர், தூத்துக்குடி மாநகராட்சி கடிதம் ந.க.எண்.4669/2018 மே.ம, எப்1, நாள்.18.03.19
7. தான பத்திர எண். 942/19, நாள் 14.03.2019
8. அரசாணை (நிலை) எண்.255, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, நாள்.18.08.1997
9. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை கடிதம் ந.க.எண்.14085/12 எல்ஏ1, நாள்.15.05.18
10. நகர் ஊரமைப்பு இயக்குநர், அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 24282/2005/எல்ஏ2, நாள்.04.05.2006
11. நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.7978/2012/எல்ஏ2, நாள்.19.04.12

---------

பார்வை 1-ல் சுட்டியுள்ள கடிதத்துடன் பெறப்பட்ட இம்மனைப்பிரிவின் ஒப்புதலுக்காக கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்கண்ட உத்தரவு வழங்கப்படுகிறது.

1) தூத்துக்குடி உள்ரூர் திட்டப் பகுதி, தூத்துக்குடி மாநகராட்சி, ஒப்புதலளிக்கப்பட்ட அண்ணா விரிவு அபிவிருத்தி திட்டம், வார்டு-சி, பிளாக்-32, நகரளவை எண்.2/1-ல் 3.27 ஏக்கர் (13235.0 ச.மீ) ல் அமைந்துள்ள மனையிடத்தினை கட்டுப்படுத்தப்பட்ட தொழிற் பகுதியிலிருந்து குடியிருப்பு பகுதியாக முழுமைத்திட்ட நில உபயோக மாற்றம் பார்வை 2-ல் கண்டுள்ள அரசாணையில் பெறப்பட்டது. பார்வை 4-ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு ஆணையர் கடிதத்தில் குடியிருப்பு பகுதியாக நிலபயன்மாற்றம் பெறப்பட்டுள்ளதால் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு விதிகளுக்கு உட்பட்டு பரிசீலித்து ஒப்புதல் அளிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை 5-ல் கண்ட உள்ரூர் திட்டக் குழுமத்தில் பொருள் வைக்கப்பட்டதில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு சாலை அமைப்பு வரைபடம் உள்ளாட்சிக்கு அனுப்பவும் பூங்கா மற்றும் சாலை ஒப்படைப்பு செய்த பின்னர் மனைப்பிரிவு ஒப்புதல் வழங்க தீர்மானிக்கப்பட்டது. பார்வை 6 மற்றும் 7-ல் கண்டுள்ள மாநகராட்சி கடிதத்தில் தானபத்திரம் மூலம் பூங்கா / சாலைகள் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. ஒப்புதல் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு **ம.வ/தூ.உ.தி.கு எண்.02/2019** என எண்ணிடப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவுக்கு 1971–ம் ஆண்டு நகர் ஊரமைப்புச் சட்டம் பிரிவு 49–ன் கீழ், நிபந்தனைகளுக்குட்பட்டு வரைபடங்களுக்கு **தி.அ / ம.வ / தூ.உ.தி.கு. எண். 11/ 2019** என்று எண்ணிடப்பட்டு திட்ட அனுமதி வழங்கப்படுகிறது.

2) மேலும் பார்வை 10 மற்றும் 11 ஆகியவற்றில் சுட்டியுள்ள நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கைகளில் தெரிவித்துள்ளபடி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

3) பார்வை 7-ல் சுட்டிய தானபத்திரத்தின்படி பொதுத் திறவிடங்கள் மற்றும் சாலைகள் தானபத்திரம் மூலம் பதிவு செய்து உள்ளாட்சியிடம் ஒப்படைத்துள்ள-தின்படி மனைப்பிரிவு உரிமம் மாநகராட்சியால் வழங்கப்பட வேண்டும்.

4) பார்வை 8–ல் சுட்டியுள்ள அரசாணையின்படி, சாலைகள் மற்றும் திறந்தவெளி பொது ஒதுக்கீட்டுப் பகுதிகளை (பூங்கா, சிறுவர் விளையாடுமிடம் மற்றும் திறவிடம்) மனுதாரரிடமிருந்து தானபத்திரம் மூலம் பெற்றும், சாலைகள், குடிநீர், தெருவிளக்குகள் மற்றும் வடிகால் வசதிகளை செய்து மனைப்பிரிவை முழுமையாக அபிவிருத்தி செய்து, தூத்துக்குடி மாநகராட்சியிடம் ஒப்படைப்பு செய்த பின்னரும், மேலும், மேற்கண்ட அரசாணையில் கண்டுள்ள இதர நடைமுறைகளை பின்பற்றியும் ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

5)மனைப்பிரிவில் தார் சாலைகளாக அமைத்தும், சாலைகளுக்கான இடம், பூங்கா போன்ற பொதுத் திறவிடங்களுக்கான இடம் ஆகியவற்றை மாநகராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதாக மாநகராட்சியிடமிருந்து சான்று பெறப்பட்டதன் பேரில் இம்மனைப்பிரிவுக்கு தொழில் நுட்ப அனுமதி வழங்கி அனுப்பப்படுகிறது. இம்மனைப்பிரிவில் தேவையான பாலங்கள், சாக்கடை, வடிகால், துப்பரவு வசதி, தெருவிளக்கு ஆகிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதையும், தார்

சாலைகளாக அமைக்கப்பட்டுள்ளதையும் இட நேராய்வின் மூலம் உறுதி செய்த பின்னரே இறுதி ஒப்புதல் வழங்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

6) பார்வை 9-ல் கண்டுள்ள சுற்றறிக்கையின்படி மாநகராட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை மாநகராட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் துறை சர்வே எண் உட்பிரிவுகள் செய்து மாநகராட்சியால் பராமரிக்கப்பட வேண்டும்.

7) உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய்துறை சர்வே எண் உட்பிரிவுகள் செய்து அதற்கான விவரங்கள் பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

8) மனைப்பிரிவிற்கு மாநகராட்சி இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.19(ஈ)-ன்படி, அவ்வுத்தரவின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**நிபந்தனைகள்:**

1. இம்மனைப்பிரிவுக்கு நகராட்சி கட்டிட விதிகள் அனைத்தும் பொருந்தும்.
2. மனைப்பிரிவு அனுமதி தொடர்பாக ஆணையர், தூத்துக்குடி மாநகராட்சி யிடம் தனியாக உரிமம் பெறப்பட வேண்டும்.
3. "The Tamil Nadu Government in G.O. Ms.No. 112 Housing and Urban Development Department dated. 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The promoter has to advertise, market, book, sell or offer for sale or invite person to purchase in any manner any plot, apartment or building as the case may be in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority."

உறுப்பினர் செயலர் (பொறுப்பு),
தூத்துக்குடி உள்ளூர் திட்டக் குழுமம்,
தூத்துக்குடி - 2.

26/3/19

**இணைப்பு:**
வரைபடம் மற்றும் மனைப்பிரிவு
நிபந்தனைகள் 2 தொகுப்புகள்

நகல்

1 திரு.G.வெற்றிவேல்,
106, பாளையங்கோட்டை ரோடு,
தூத்துக்குடி.
(உத்தரவு மட்டும்)

2.வைப்பு கோப்பு
(வரைபடம், நிபந்தனை, கடிதம்)

3.சார்பதிவாளர்,
தூத்துக்குடி மேலூர்,
போல்பேட்டை,
தூத்துக்குடி-2.